செய்தி வெளியீடு எண்:1350 நாள்:15.12.2021

<u>செய்தி வெளியீடு</u>

புள்ளம்பாடி வாய்க்கால் மூலம் திருச்சி மற்றும் அரியலூர் மாவட்டங்களில் 22,114 ஏக்கர் நிலங்களும், புதிய கட்டளை மேட்டு வாய்க்கால் மூலம் திருச்சி மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் 20,622 ஏக்கர் நிலங்களும் பாசன வசதி பெறும் வகையில் மேட்டூர் அணையிலிருந்து, புள்ளம்பாடி வாய்க்காலில் வினாடிக்கு 500 கனஅடி வீதமும் மற்றும் புதிய கட்டளை மேட்டு கால்வாயில் வினாடிக்கு 400 கன அடி வீதமும் 01.08.2021 முதல் 15.12.2021 வரை 137 நாட்களுக்கு தண்ணீர் திறந்து விட ஆணையிடப்பட்டு அதன்படி தண்ணீர் திறந்துவிடப்பட்டது. தற்பொழுது மேட்டூர் அணையிலிருந்து புள்ளம்பாடி வாய்க்கால் மற்றும் புதிய கட்டளை மேட்டு வாய்க்கால் மூலம் பாசனத்திற்கு 15.12.2021–க்கு பிறகு நீட்டிப்பு செய்து தண்ணீர் திறந்து விடுமாறு கோரிய புள்ளம்பாடி மற்றும் புதிய கட்டளை மேட்டு கால்வாய் பாசன விவசாயிகள் சங்கங்களின் கோரிக்கையினை ஏற்று, மேட்டூர் அணையிலிருந்து புள்ளம்பாடி வாய்க்கால் மற்றும் புதிய கட்டளை மேட்டு வாய்க்கால் மூலம் பாசன நிலங்களுக்கு 16.12.2021 முதல் 28.01.2022 வரை கால நீட்டிப்பு செய்து, தண்ணீர் திறந்து விட அரசு ஆணையிட்டுள்ளது.

இதனால் திருச்சி, தஞ்சாவூர் மற்றும் அரியலூர் மாவட்டங்களிலுள்ள 42,736 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**
**பொதுப்பணித்துறை**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**